# பத்திரிக்கைச் செய்தி

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.

## சேரன்மகாதேவி கல்வி மாவட்ட உலகத் திறனாய்வு திட்ட 5 நாள் பயிற்சி முகாம் நிறைவு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவின் கீழ் செயல்பட்டு வரும், கல்லிடைகுறிச்சி SDAT விளையாட்டு அரங்கத்தில் 22.04.2017 முதல் கோடை கால பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது. இதில் சேரன்மகாதேவி கல்வி மாவட்ட உலகத்திறனாய்வு திட்ட கோடை கால பயிற்சி முகாமானது கடந்த 5 நாட்களாக 22.04.2017 முதல் 26.04.2017 வரை நடைபெற்று 26.04.2017 அன்று காலை 8.30 மணிக்கு நிறைவு பெற்றது. சேரன்மகாதேவி கல்வி மாவட்டத்தைச் சார்ந்த 165 பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

26.04.2017 அன்று நிறைவு நாள் விழாவிற்கு தலைமை தாங்கி இவர்களுக்கான பங்கேற்பு சான்றிதழை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் **முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள்** வழங்கினார்கள். உடற்கல்வி ஆசிரியர்கள் திரு. சிதம்பரம் AVRMV மேல்நிலைப்பள்ளி, திரு. M. மணிகண்டன் திலக் வித்யாலயா மேல்நிலைப்பள்ளி, திரு.கணேசன் சிலம்பம் ஆசிரியர், திரு. ராஜகோபால் கல்லிடைகுறிச்சி SDAT விளையாட்டரங்க பொறுப்பாளர் மற்றும் திருமதி. சுந்தரி அரசு மேல்நிலைப்பள்ளி கல்லிடைகுறிச்சி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இப்பயிற்சி முகாமில் 6,7,8 வகுப்புகள் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு பிரத்யேகமாக அடிப்படை விளையாட்டுத் திறன் Speed, Strength, Endurance, Flexibility and Combine Motor Qualities போன்ற அடிப்படை விளையாட்டு திறன்களை மேம்படுத்த அறிவியல் அடிப்படையிலான பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

**அனைத்து வயதினருக்குமான 15 நாள் பயிற்சி முகாம் சங்கரன்கோவில் SDAT விளையாட்டரங்கம், சிவலார்குளம் SDAT விளையாட்டரங்கம், கல்லிடைகுறிச்சி SDAT விளையாட்டரங்கம், மேலப்பாளையம் SDAT விளையாட்டரங்கம் ஆகிய விளையாட்டரங்கங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நுழைவு கட்டணம் இல்லை. இலவசமாக பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம்.**

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தெரிவித்தார்கள்.

ஒம்/–

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.